## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 254/2020.

Prosecution witness for P.W.1.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. பிரேம்குமார். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2025.

A1 to A5 present.

முதல் விசாரணை

நான் தற்போது மாரமங்கலத்தில் குடியிருந்து வாழை இலை வியாபாரம் செய்து வருகிறேன். இறந்துபோன காளிமுத்து என் தகப்பனார். ஆஜர் எதிரிகளை தெரியும். 12.11.2019 அன்று எங்கள் ஊரில் ஒரு வீட்டில் திருமணம் நடந்தது அந்த வீட்டில் டிஜிட்டல் பேனர் வைக்கப்பட்டிருந்தது. என் சித்தப்பா மகன் வினித் பெயர் போடப்படவில்லை. 1ம் எதிரியின் தங்கையின் திருமணம் நடந்தது. 1ம் எதிரியும், மேற்படி வினித்தும் நெருங்கிய நண்பர்கள். வினித் பெயர் போடப்படவில்லை என்பதால் 1ம் எதிரிக்கும், வினித்துக்கும் சண்டை நடந்தது. அவர்கள் பேசாமல் இருந்தார்கள். 12.11.2019 அன்று மாலையில் சுமார் 5 மணியளவில் மேற்படி வினித்தும் அவரது மனைவியும் இருசக்கர வாகனத்தில் ஏரல் வழியில் சென்று கொண்டிருந்தார்கள். மாரமங்கலத்தில் விவசாய சங்கத்திற்கு அருகில் அவர்கள் சென்று கொண்டிருக்கும்போது 1ம் எதிரி செருப்பை எடுத்து அவர்களை நோக்கி அடிப்பதைப்போல காட்டினார். அதுகுறித்து என் தம்பி வினித் என்னிடம் வந்து சொன்னார். அதனால் நானும், என் தம்பி வினித்தும் 1ம் எதிரி வீட்டிற்கு சென்றோம். 1ம் எதிரியின்

பெற்றோரிடம் 1ம் எதிரி செருப்பை காட்டியது குறித்து சொன்னோம். அந்த தேதியில் எங்கள் ஊரில் ஒரு இறப்பும் நடந்திருந்தது. 1ம் எதிரியின் பெற்றோர் 1ம் எதிரி அப்படி செய்திருக்கமாட்டான் என்று சொன்னதால் அந்த துக்க வீட்டிற்கு சென்று அங்கு இருந்தவர்களிடம் நானும், என் தம்பியும் மேற்படி சம்பவம் குறித்து சொன்னோம். ஊர்ப்பெரியவர்கள் எங்களையும், 1ம் எதிரியையும் அழைத்து சத்தம்போட்டு அனுப்பிவிட்டார்கள். நாங்கள் மீண்டும் துக்க வீட்டிற்கு சென்றபோது 1ம் எதிரியும், அவரது தகப்பனாரும் எங்களை ஏசினார்கள். அதனால் அங்கிருந்த பெரியவர்கள் மீண்டும்சத்தம் போட்டு அனுப்பிவிட்டார்கள். 13.11.2019 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் மேற்படி விவசாய சங்கத்திற்கு அருகில் என் தங்கை தங்கவள்ளி வீட்டிற்கு நானும், என் பெற்றோரும் போனோம். வீட்டிற்கு வெளியே நின்று பேசிக் கொண்டிருந்தோம். அப்போது 1ம் எதிரி கத்தியுடன் வந்து ஏலே ஊரில் எங்கள் குடும்பத்தை கேவலப்படுத்திவிட்டீர்கள் உன்னை குத்தி கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி கத்தியால் என்னை 1ம் எதிரி குத்த வந்தார். நான் இடது கையால் தடுத்தபோது எனது இடது உள்ளங்கையில் லேசான காயம் ஏற்பட்டது. அப்போது 2ம் எதிரி கம்பால் என் உச்சந்தலையில் அடித்துவிட்டார். தலையில் எனக்கு 13 தையல் போடப்பட்டது. என் தகப்பனார் என் மகனை அடி,க்காதீர்கள் என்று சொன்னபோது 1ம் எதிரி என் தகப்பனாரின் வலது மார்பில் கத்தியால் குத்திவிட்டார். என் தகப்பனார் கீழே விழுந்துவிட்டார். 2 முதல் 5 எதிரிகள் அங்கு ஓடி வந்த என் தாயாரை கம்பால் தலையிலும், தோள்பட்டையிலும் அடித்துவிட்டார்கள். அங்கு குடியிருந்த என் பெரியப்பா மாரியப்பன், என் தங்கையின் கணவர் மாரித்துரை தடுக்கும்போது என் தங்கையில் வயிற்றில் மிதித்துவிட்டார். 2ம் எதிரியும் அவரது வயிற்றில் கம்பால்

குத்திவிட்டார். மேற்படி மாரித்துரை 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி நான், என் தங்கை, என் பெற்றோர் ஆகியோர் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். எனக்கு மருத்துவமனையில் தையல் போடப்பட்டு வெளியே வந்தபோது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்துகொண்டார்கள். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ1**. என் தகப்பனாரை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார்கள். 16.11.2019 அன்று 10.15 மணியளவில் என் தகப்பனார் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு இறுதி சடங்கிற்கு சென்றேன். என் தாயார் 10 நாட்களாக உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார். 1ம் எதிரி சம்பவத்தில் பயன்டுத்திய கத்தி **சா.பொ.1**. 2 முதல் 5 எதிரிகள் சம்பவத்தில் பயன்படுத்திய கம்புகள் **சா.பொ.2 முதல் 5**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

சா.பொ.1 முதல் 5 பொருட்கள் கிராமத்தில் எல்லார் வீட்டிலும் இருக்கக்கூடியவை என்றால் சரிதான். மருத்துவமனைக்கு வந்து புகார் வாக்குமூலம் பதிவு செய்த போலீசார் யார் என்று எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலம் பதிவு செய்யும்போது நான் ஒரு கையொப்பம்தான் போட்டேன். நான் பட்டய படிப்பு முடித்துள்ளேன். அ.சா.ஆ1ல் உள்ள தமிழ் வாசகங்கள் ஒரு மையினாலும், அதில் கையொப்பம் மற்றொரு மையினாலும் அதில் ஆங்கிலத்தில் உள்ள வாசகங்கள் வேறு ஒரு மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றும், என்னிடம் வெற்றுத்தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டு போலீசார்

பூர்த்தி செய்து கொண்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. என் தங்கைக்கு காயமே இல்லை என்றால் தவறு. என் தாயாருக்கு இரண்டு காயங்கள் இருந்தது. என் தகப்பனாருக்கு ஒரே காயம்தான் ஏற்பட்டது. எனக்கு மூன்று காயங்கள் ஏற்பட்டது. 2ம் எதிரி என் தங்கையை கம்பால் வயிற்றில் குத்தியதாக அ.சா.ஆ1ல் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி மாரியப்பன் என் தகப்பனாரின் அண்ணன். மாரித்தங்கம் என்பவர் என் தங்கையின் மாமியார். சாட்சி கஸ்தூரி என்பவர் என் தகப்பனாரின் அண்ணன் மனைவி என்றால் சரிதான். மாரியம்மாள் என்பவர் என் தகப்பனாரின் அக்கா. எங்கள் பகுதியில் 500 மீட்டர் இடைவெளியில் இரண்டு மாரமங்கலம் என்ற இரண்டு பகுதிகள் உள்ளன என்றால் சரிதான். சம்பவ இடம் தவிர மற்றொரு மாரமங்கத்திற்கு தீப்பாச்சி மாரமங்கலம் என்று பெயர் என்றால் சரிதான். தீப்பாச்சி மாரமங்கலத்தில் நானும், என் பெற்றோரும் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். திருமண வீட்டில் டிஜிட்டல் பேனர் வைப்பதற்கு ஏற்பட்ட பிரச்சனை குறித்து நாங்கள் 1ம் எதிரி வீட்டிற்கு சென்றதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அ.சா.ஆ1ல் 1ம் எதிரியின் தங்கை திருமணம் பற்றியோ, அங்கு டிஜிட்டல் பேனர் வைக்கப்பட்டது குறித்தோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் பற்றி எனக்கு நன்றாக தெரியும். என் தங்கை வீட்டிற்கு வடக்கே மாரமங்கலம் விவசாய சங்க காலிமனை உள்ளது. அதற்கும் வடக்கே நாராயணன், சங்கர் ஆகியோர் காரை வீடுகள் உள்ளன என்றால் சரிதான். தங்கவள்ளி வீட்டிற்கு தெற்குபுரம் கமலா, பாப்பா, கணபதி ஆகியோர் வீடுகள் உள்ளன என்றால் சரிதான். தங்கை வீட்டிற்கு எதிர்புரம் திரவியம், நாராயணன், திருமணி ஆகியோர் வீடுகள் உள்ளன. சம்பவம் சுமார் அரை மணிநேரம் நடந்தது. நான் என் தங்கை வீட்டிற்கு வரும் விபரத்தை எதிரிகள் யாருக்கும் தகவல் சொல்லிவிட்டு

வரவில்லை. அந்த பகுதியில் உள்ள நபர்கள் மேற்படி விவசாய சங்கத்திற்கு பாத்தியப்பட்ட காலி இடத்தில்தான் குடித்துவிட்டு பிரச்சனை, தகராறு செய்வார்கள் என்றால் சரியல்ல. மேற்படி நபர்களால் என் தங்கைக்கு பிரச்சனை ஏற்படக்கூடாது என்பதற்காக நானும், காயம்பட்ட சாட்சிகளும் மேற்படி சமயத்தில் என் தங்கை வீட்டிற்கு போனோம் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் என் தங்கைக்கு துணைக்கு போனதாக சொல்லியுள்ளேன். என்தங்கை வீட்டை சுற்றி பல வீடுகள் உள்ள சூழ்நிலையில் அவர் தனியாக இருப்பதற்காக பாதுகாப்பிற்காக நான் போகவில்லை என்றும், சமூக விரோதிகளிடமிருந்து அவருக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காகத்தான் நாங்கள் போனோம் என்றும் சொன்னால் சரியல்ல. என் தாயாரின் தங்கை பெயர் ஜெயந்தி. அவரது மகன் பெயர் மதன்குமார். மேற்படி ஜெயந்தி தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். மேற்படி மதன்குமார் மாரமங்கலத்தை சார்ந்த முத்துராமன் என்பவரின் 2வது மகள் கவிதா என்பவரை காதலித்து வந்தார் என்றால் சரிதான். அதற்கு எங்கள் குடும்பம் ஆதரவாக இருந்தது என்றால் சரிதான். அதனால் கவிதாவின் ராஜ் எங்கள் குடும்பத்தின் மீது விரோதமாக இருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி கவிதா தற்கொலை முயற்சி செய்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் எனக்கு தெரியாது. அதனால் எங்கள் குடும்பத்திற்கும், மேற்படி ராஜ் தரப்பினருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரியல்ல. அந்த முன்விரோதம் காரணமாக நாங்கள் நால்வரும் தாக்கப்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டது எனக்கு தெரியாது. மேற்படி விவசாய சங்க காலி மனையில் போலீசார் உடைந்த மதுபாட்டில் துண்டுகளை பார்வையிட்டு எழுதிக் கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த விவசாய சங்க

இடத்தில் சாட்சிகள் சண்டையிட்டு உருண்டு புரண்டு எழுந்ததால் சாட்சிகளுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னை 5 பேர்கள் தாக்கினார்கள். என் தாயாரை 4 பேர் தாக்கினார்கள். தங்கவள்ளியை 2 பேர் தாக்கினார்கள். இறந்துபோன என் தகப்பனாரை 1ம் எதிரி மட்டும்தான் தாக்கினார். தற்போது தாக்குதல் செய்த எதிரிகளின் குற்ற செயல் குறித்து அ.சா.ஆ 1 லோ, போலீஸ் விசாரணையிலோ நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ 1 க்கு பிறகு என் தகப்பனாரின் இறுதி சடங்கில் நான் கலந்து கொள்ளும் வகையில் இடைப்பட்ட காலத்தில் எந்த போலீஸ் அதிகாரியும் என்னை விசாரிக்கவில்லை.

4 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்குவிசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டு மேலும் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

மருத்துவமனையில் எப்படி காயம் ஏற்பட்டது என்பது குறித்து மருத்துவர் என்னிடம் கேட்கவில்லை. மருத்துவரிடம் தீப்பாச்சி மாரமங்கலத்தில் எங்கள் வீட்டில் வைத்து எனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இரண்டு இனம் தெரிந்த நபர்களால் நான் தாக்கப்பட்டதாக மருத்துவரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. 4 ம் எதிரியின் வீடு எங்கள் வீட்டிலிருந்து மூன்று வீடுகள் தள்ளி உள்ளது. தற்போதும் அவர் அந்த வீட்டில்தான் 4 ம் எதிரி குடியிருக்கிறார்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.02.06 19:05:45 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.